**உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்றச் செயற்திட்டம் - 2013**

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 19 ஆந் திகதி 2201 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்றச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகள் ஆற்றலை வளர்தலும் வறுமையைக் குறைத்தலும் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. (i) உட்கட்டமைப்பு மற்றும் சேவை வழங்கலை முன்னேற்றுதலும் விரிவாக்கலும் (ii) நகர வாழ்வாதாரங்களை தரமுயர்த்துதல், மற்றும் (iii) உள்ளூராட்சி அதிகார சபைகளின் நகர முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் நிதி இயலளவை முன்னேற்றதுல். என்பவற்றின் ஊடாக செயற்திட்டப் பகுதிகளில் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் சனத்தொகைக்கான நகர சுற்றாடல், பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 66.7 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2006 யூலை 04 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 ஒக்டோபர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2012 ஏப்ரல் 26 ஆந் திகதிய கடிதத்தின்படி, செயற்திட்ட காலம் 2013 சனவரி 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பை பயன்படுத்தி 2013 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட

கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) கடனளிக்கும் முகவர்கள் நிதிகளிலிருந்தான செயற்திட்ட நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்தனவா எனபதும்,

(ஏ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு திருப்திகரமான அளவீடுகளை எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 முடிவடைந்த முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு திருப்திகரமான அளவீடுகளை எடுக்கப்பட்டிருந்தனவா என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா. 16,149,228 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 6,294,027,071 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் என்பவற்றின் ஆக்கக் கூறு வரியான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **ஆக்கக் கூறு ஏ** | | | |
| செயலமர்வுகள் | - | 599,815 | 5,878,418 |

| | | | |
|---|---|---|---|
| மனித வள அபிவிருத்தி | - | 20,248,824 | 52,567,075 |
| **ஆக்கக் கூறு பீ** | | | |
| சிவில் பொறியியல் | - | 1,447,524,413 | 4,418,555,009 |
| உபகரணம் | - | 34,275,045 | 453,905,749 |
| **ஆக்கக் கூறு சீ** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | - | 168,329 | 87,111,839 |
| நவீனமயப்படுத்தல் | - | - | 4,675,132 |
| ஆலோசனை | 106,644 | 77,799,913 | 597,953,295 |
| நிர்வாகக் கிரயம் | 16,042,584 | 94,444,454 | |
| வட்டி | - | 45,969,250 | 108,841,103 |
| | 16,149,228 | 1,721,030,043 | 6,294,027,072 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான கட்டுநிதிக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக் கணக்கின் மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,803,147.18 | 229,289,638 |
| கூட்டு:- மீள் நிரப்பல்கள் | 152,165.84 | 19,948,942 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 260,147 |
| | 1,955,313.02 | 249,498,727 |
| கழி:- பற்றுதல்கள் | 1,457,122.21 | 184,358,784 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 498,190.81 | 65,139,943 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட வேண்டிய வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 06 மாதங்களிற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

செயற்திட்டத்தின் வரைவு நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 17 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் ரூபா 87,111,839 பெறுமதியான சொத்துக்கள் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்கள் உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டம் என் கோரப்பட்ட வேறு செயற்திட்டத்திற்கு ஏற்கனவே மாற்றப்பட்டிருந்தது.

**5.3 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | ஏற்பாட்டின் சதவீதமாக 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 46.0* | 4,933 | 181 | 168.28 | 4,511.28 | 91.45 |
| இலங்கை அரசாங்கம் | 16.7 | 1,541 | 71 | 70.1 | 1,421.1 | 92.21 |
| மொத்தம் | 62.7 | 6,474 | 252 | 238.38** | 5,932.38** | 91.63 |

* வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2011 செப்தெம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், நிதியளிக்கப்பட் வேண்டுமென உடன்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன் மொத்த தொகையில் ஐ.அ.டொலர் 4 மில்லியன் உள்நாட்டு உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டம் (புற நெகும) என அமைக்கப்படும் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

** உள்ளூராட்சி அதிகாரசபையால் ஏற்பட்ட செலவினங்கள் பங்களிப்புகள் உள்ளடக்கப்பட்டிருக்காததால் இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் காட்டப்பட்ட தொகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

**5.4 நெருக்கமான செயற்திட்ட நடவடிக்கைகள்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 சனவரி 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் அறிக்கை 2013 ஏப்ரல் மாதத்தில் செயற்திட்ட பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்த்தின் நடவடிக்கைகளை மூடுவதற்கு நிறைவேற்றல் முகவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.